**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.13/2024

பி.வா.சா.2–செல்வநாதன் த/பெ சடையன் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 28.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பி.வா.சா.2– செல்வநாதன் த/பெ சடையன்</u>**

**<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கினேன் என்றால் ரூ.80,000/– பேசி கொடுத்து வழிகாட்டுதல் மதிப்பிற்காக ரூ.40,000/–க்கு பத்திரம் எழுதினேன். நான் வாங்கிய கிரையப்பத்திரம் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்று தெரியாது. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சீர்திருத்தம் செய்துள்ளதாக சொல்லியதற்கு என்னென்ன சீர்திருத்தம் செய்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் வாழை, நெல் சாகுபடி செய்துள்ளதாக சொல்லியுள்ளேன்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

**1.** 1ம் பிரதிவாதி தங்கராஜ் எனது ஊரைச்சேர்ந்தவர், உறவினர் அல்ல பழக்கமானவர். 1ம் பிரதிவாதி தங்கராஜ்ம் அவருடைய மனைவியான வாதியும் 25 ஆண்டுகளாக தனித்தனியாக பிரிந்து வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை ஒன்றாக வசித்து வருகிறார்கள். வாதி 1ம் பிரதிவாதி மீது 2020ம் ஆண்டு OS NO. 12/2000 என்ற வழக்கு ஜீவனாம்சம் கோரி குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் என்றால் எனக்குத் தெரியாது.

2. 17.08.2005 ல் வாதி ரூபாய் 22,000/– கொடுத்து தாவா சொத்தை வட்டிக்கு ஈடாக என்னை அனுபவம் செய்ய சொல்லி என்னிடம் சுவாதீனம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். 17.08.2005 தாவா சொத்தின் சுவாதீனம் வாதியின் அனுபவத்தில் இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்து வாதியின் கணவர் 1ம் பிரதிவாதி பெயரில் இன்னமும் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள போது எவ்வாறு வாதியிடம் பணம் கொடுத்து எழுதி வாங்கினேன் என்றால் அப்போது கூட்டாகத்தான் இருந்தார்கள்.

3. யார் பெயரில் சொத்து உள்ளதோ அவரிடம் தான் சொத்து எழுதி வாங்கவேண்டும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.11

ஆவணம் கடன் ஈட்டுப்பத்திரம் வாதி எழுதிக்கொடுத்தது அல்ல போலியானது என்றால் சரியல்ல. பி.வா.சா.11ல் சாட்சி கையொப்பமிட்ட நபர்கள் என்னுடைய நண்பர்கள் அவர்களை வைத்து போலியாக தயார் செய்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.11 ல் உள்ள கையொப்பம் வாதியினுடையது அல்ல என்றால் சரியல்ல.

4. வாதி ஒரு ஐயப்பன் என்பவரிடம் தான் கடன் வாங்கி லிசுக்கு கொடுத்தார் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளபோது நான் எவ்வாறு 1ம் பிரதிவாதியிடம் எழுதி வாங்கினேன் என்றால் வாதி தாவா சொத்து 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது அதனால் 1ம் பிரதிவாதி கையொப்பம் செய்தால் போதும் என்று சொன்னார். வாதி அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் வாதியும், அவரது மகன் பாலமுருகனும் வாதிக்கு எதிராக அப்போது இருந்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி செல்வராணி என்ற பெண்ணுடன் குடும்பம் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியும், செல்வராணியும் தனிக்குடும்பமாக உள்ளார்களா என்றால் எனக்குத் தெரியாது.

5. 1ம் பிரதிவாதி செல்வராணியுடன் வசித்து வந்ததால்தான் வாதி ஜீவனாம்ச வழக்கு 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்தார் என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்து மீது குளித்தலை சார்பு நீதிமன்றம் Charge பாத்தியம் OS.No.12/2000 வழக்கில் கொடுத்துள்ளது எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் ஒரே ஊர் மற்றும் நெருங்கிய நண்பர்கள் என்பதால் வாதியை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் கிரையப்பத்திரம் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் Charge பாத்தியம் உள்ளதை தெரிந்து கொண்டு வேண்டுமென்று நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

6. இன்றைய தேதிவரை குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் Charge பாத்தியம் மேற்படி OS.No. 12/2000 வழக்கில் நீக்கப்படவில்லை என்றாலும் அந்த சொத்தை நான் வாங்கியது செல்லாது என்றாலும் சரியல்ல. நான் கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பாலமுருகனிடம் கையெழுத்து போட்டால் சொத்து தருகிறேன் என்று சொல்லி ஏமாற்றி சாட்சி கையொப்பம் 1ம் பிரதிவாதி பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அதனால் தான் 1ம் பிரதிவாதிக்கும் அவரது மகன் பாலமுருகனுக்கும் விரோதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வாங்கிய கிரையம் செல்லாது என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2025.08.29 15:12:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.